FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019

## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – I

01. இன்றைய மத்திய கிழக்கு நாட்டிலே ஈராக் எனக் குறிப்பிடப்படுவது
    1) ஊர் 2) லாகாஸ் 3) மொசப்பெத்தேமியா
    4) எகிப்து 5) பாரசீகம்

02. தைபர் ஆற்றின் கரையோரத்தில் அமைந்துள்ள இடம்
    1) உரோம் 2) எகிப்து 3) மொசப்பெத்தேமியா
    4) கிரேக்கம் 5) ஆப்கானிஸ்தான்

03. “இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை” என அழைக்கப்படுபவர்
    1) தூய ஜஸ்டின் 2) தூய கிளமென்ற் 3) தூய ஜெரோம்
    4) தேர்துலியன் 5) தூய இரனேயுஸ்

04. பாலஸ்தீனாவை கிறிஸ்தவர்கள் எவ்வாறு அழைத்தனர்
    1) இஸ்ராயல் 2) கானான் 3) பாலும்தேனும் பொழியும் நாடு
    4) புனித நாடு 5) பிலிஸ்தீன்

agaram.lk

05. உரோமைப் பேரரசர் திபேரியு சீசரின் பெயரிலே திபேரியாவை கட்டிய குறுநில மன்னன்
    1) ஏரோது அந்திப்பா 2) மகா ஏரோது 3) ஆர்க்கெலா
    4) பிலிப்பு 5) ஏரோது அகிரிப்பா

06. யூத சமுதாயத்திலே “அம்-ஹா-அரஸ்” என்று அழைக்கப்பட்டவர்கள்
    1) அடிமைகள் 2) சமாரியர் 3) பெண்கள்
    4) சிதறி வாழ்ந்த யூதர்கள் 5) ஏழைகள்

07. தொழுகைக் கூடத்தின் அமைப்பின் தவறான கூற்றினை தெரிவு செய்க.
    1) இது நீள் சதுர அமைப்பினைக் கொண்டது
    2) எருசலேமை நோக்கியதாகவே இது அமைக்கப்பட்டிருக்கும்
    3) 5 அல்லது 7 கிளைகள் கொண்ட விளக்குத்தண்டு காணப்படும்
    4) அகன்ற சுவர்களையும் மண்டபங்களையும் கொண்டது
    5) இறை வார்த்தை வாசிப்பதற்கு பேச்சுமேடை காணப்படும்

08. கி.பி 70ல் எருசலேம் ஆலயத்தினை முற்றாக அழித்த உரோமைப் பேரரசன்
    1) தீத்தூஸ் 2) நீரோ 3) அவுரேலியன்
    4) வலேரியன் 5) தியோக்கிளேசியன்

09. கி.மு 19ல் எருசலேம் ஆலயத்தை மிகப் பிரமாண்டமான அமைப்பில் புனரமைத்தவர்
1) பிலிப்பு 2) பெரிய ஏரோது 3) ஏரோது அந்திப்பா
4) ஆர்க்கெலா 5) சீருஸ்

10. எருசலேம் ஆலயத்தின் மேற்கு மதிலை யூதர்கள் எவ்வாறு அழைத்தனர்
1) அழகு வாயில் 2) ஒப்பனை வாயில் 3) கல்மேடை
4) கண்ணீர்ச் சுவர் 5) யாவேயின் மதில்

11. "பெருஷ்சிம்" என்பதன் பொருள்
1) வாழுதல் 2) செபித்தல் 3) தனித்து நிற்பவர்
4) ஒன்று கூடுதல் 5) பலிசெலுத்துதல்

12. கி.பி 6ம் நூற்றாண்டிலே கலிலேயனான யூதாஸினால் தோற்றிவிக்கப்பட்ட குழு
1) எசீனியர் 2) தீவிரவாதிகள் 3) சதுசேயர்
4) பரிசேயர் 5) மறைநூல் அறிஞர்

13. யூதக் குடும்பங்களின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களாக கருதப்படுவன
A) தந்தையே குடும்பத்தின் முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தார்.
B) குழந்தைப்பேறு ஆசீராகக் கருதப்பட்டது.
C) குழந்தைக்கு பெயர் சூட்டுவது தாயின் பொறுப்பாகும்.
D) திருமணம் முடித்த பின்னர் பிள்ளைகள் தந்தைக்கு கட்டுப்பட வேண்டியதில்லை
E) குழந்தைக்கு 8ம் நாளில் அல்லது 40 நாட்களுக்குள் விருத்த சேதனம் செய்ய வேண்டும்
1) A C D 2) A B E 3) B D E 4) A B D 5) B C D

14. யூதர்களின் கல்வி முறைகளுள் பொருந்தாத கூற்று
1) சிறுவயதிலே மத ஒழுக்க விழுமியங்களினை தந்தையிடமிருந்தே கற்றுக்கொள்ள வேண்டும்
2) யூதக் குழந்தை ஆறு வயதில் தந்தையின் பொறுப்பில் கல்வியைப் பெறுதல் வேண்டும்
3) யூத சட்டங்களையும், சடங்குகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்
4) இவர்களின் கல்வி வாய்மொழி போதனை மூலமே கற்றுக் கொண்டனர்
5) தந்தையர்கள் தமது பிள்ளைகளுக்கு தொழிற் கல்வியையும் கற்றுக் கொடுத்தனர்

15. "மோகர்" எனப்படுவது
1) ஒரு யூத ஆணுக்கும், பெண்ணுக்குமான திருமண ஒப்பந்தம்
2) யூதர்கள் பாவங்களுக்கு பரிகாரம் செய்யும் பலி முறை
3) யூதர்களின் அன்றாட செபம்
4) ஓய்வு நாள் அனுசரிப்பு பற்றியது
5) மணமகன் மணமுடிக்கும் பெண்ணின் தந்தைக்கு கொடுக்கும் நன்கொடை

16. மத்தேயு நற்செய்தியில் காணப்படும் இயேசுவின் இறையரசு பற்றிய ஐந்து அறிவுரைகளில் முதலாவதாக இடம்பெறுவது
1) உவமைகள் 2) மலைப்பொழிவு 3) திருந்தூதுரை
4) திருச்சபையின் வாழ்வு 5) நிறைவு காலம்

17. பேறுகள் என்பதன் கிரேக்கச் சொல்
1) "மகாரியோ" 2) தெபிலின் 3) தலித் 4) தார்கும் 5) ஷேமா

agaram.lk

18. நயீன் ஊர்க் கைம்பெண்ணின் மகனை இயேசு உயிர்த்தெழச்செய்த நிகழ்வு பழைய ஏற்பாட்டில் எந்த இறைவாக்கினரின் புதுமையுடன் ஒத்ததாக காணப்படுகின்றது.
1) எசாயா 2) ஆமோஸ் 3) எலியா 4) எரேமியா 5) எசேக்கியல்

19. A) கி.பி 50 – 52 காலப்பகுதி
B) பயணத்தோழர்கள் பர்னபா, யோவான் மாற்கு
C) எருசலேம் சங்கத் தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டது
D) இதுவரை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவித்தல்
E) ஆளுனன் செர்கியு பவுல் மனம்மாற்றம் பெற்று கிறிஸ்தவத்தில் இணைதல்
மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் முதலாவது மறைத்தூதுப் பயணத்துடன் பொருந்தாத கூற்றுக்கள்
1) A C 2) B D 3) D E 4) A E 5) B C

20. இலத்தீன் மொழிபெயர்ப்பான “வுல்கத்தூஸ் என்பதன் பொருள் …………… என்பதாகும்
1) தூய்மை, தனித்துவம் 2) பொதுமை, எளிமை 3) இலகுநடை, தனித்துவம்
4) பொதுமை, தூய்மை 5) தூய்மை இலகுநடை

21. புனித அகுஸ்தீனார் கண்டனம் செய்த வாதத் தப்பறைகள் கொண்ட தொகுதி?
1) மனிக்கேயம், நொஸ்ரிக்கம், ஸ்தோயிக்கம்
2) டொசற்றிசம், மனிக்கேயம், பெலாறியப் பேதகம்
3) மனிக்கேயம், டொசற்றிசம், தொரைத்தேயம்
4) ஸ்தோயிக்கம், எப்பிக்கூறியசைம், மனிக்கேயம்
5) பெலாஜியம், தொனத்தேயம், மனிக்கேயம்

22. மக்கபேயரின் காலத்தில் இஸ்ராயலர் மீது கிரேக்க பண்பாட்டை புகுத்திய மன்னன்
1) மகா அலெக்சாண்டர் 2) அந்தியோக்கு எபிபானுஸ் 3) பொம்பேயி
4) சைரஸ் 5) நெபுகத்னேசார்

agaram.lk

23. மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயச் சிந்தனையாளர்களுள் பொருத்தமற்றவரை தெரிக.
1) மாட்டின் லூதர் 2) தேர்த்துலியன் 3) சுவிங்ளி
4) யோண் கல்வின் 5) தோமஸ் முன்றசர்

24. “இந்த அடையாளத்தைக் கொண்டு நீ வெற்றி பெறுவாய்” என்ற கூற்றுடன் தொடர்புடையவர்
1) கொன்ஸ்தாந்தின் 2) கொன்ஸ்தான்குளோர் 3) மாக்சென்சியுஸ்
4) லிசினியுஸ் 5) கல்லேரியு

25. தூய பவுல் தனது 2 வது மறைத்தூதுப் பயணத்திலே எதென்ஸ் நகர மக்களுக்கு மறை உரையாற்றிய போது பயன்படுத்திய கிரேக்க சிந்தனை
1) நொஸ்திக்கம் 2) பிளேற்றோனிசம் 3) மனிக்கேயம்
4) எப்பிக் கூரியனிசம் 5) ஹெலனிசம்

26. உரோமையர் டிசம்பர் 25ம் திகதி கொண்டாடி வந்த விழா
1) கிறிஸ்மஸ் விழா 2) அரசர்களுக்கான விழா 3) பாஸ்கா விழா
4) சூரியக்கடவுள் விழா 5) புனிதர்களுக்கான விழா

27. அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்தின் நிறுவுனர்
1) ஆரியுஸ் 2) ரியூடோர் 3) எயுசேபியஸ்
4) சிறில் 5) லூசியன்

28. இசையின் பாதுகாவலியான தூய சிசிலியம்மாள் மறை சாட்சியாக மரித்த கலாபனைக் காலம்

1) கி.பி 106 – 171  2) கி.பி 200 – 2011  3) கி.பி 161 – 180
4) கி.பி 95 – 96  5) கி.பி 257 – 260

29. உரோமைய கலாபனையின் விளைவாக கருத முடியாதது

1) கிறிஸ்தவர்களின் விசுவாசம் தளர்வடைந்தது.
2) கிறிஸ்தவர்கள் மத்தியிலே தாராள குணமும், தியாகமும் வளர்ந்தன.
3) மறைகாட்சிகளின் மரணம் வழியாக மறை உண்மைகளின் வலிமை எடுத்துக் காட்டப்பட்டது
4) திருச்சபையின் வளர்ச்சிக்கு வித்திட்டது
5) கிறிஸ்தவர்களின் சொத்துக்கள், உடமைகள் பறிக்கப்பட்டமை

30. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முதல் பல்கலைக்கழகமாக விளங்குவது.

1) பரீஸ் பல்கலைக்கழகம்  2) பொலஞ்ஞா பல்கலைக்கழகம்
3) சலமன்கா பல்கலைக்கழகம்  4) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்
5) ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

31. துறவிகளின் வாழ்வுக்கு முன்மாதிரிகையான வழிகாட்டிகளாக திகழ்ந்தவர்கள்

1) ஆபிரகாம், இயேசுக்கிறிஸ்து, பவுல்
2) எலியா, ஏசாயா, இயேசுக்கிறிஸ்து
3) யாக்கோபு, மோசே, இயேசுக்கிறிஸ்து
4) ஆபிரகாம், ஏசாயா, திருமுழுக்கு யோவான்
5) எலியா, திருமுழுக்கு யோவான், இயேசுக்கிறிஸ்து

32. துறவற வாழ்வின் நிறுவுனராக கருதப்பட்டவர்

1) வனத்து அந்தோனியார்  2) தேப்ஸ் சின்னப்பர்  3) பக்கோமியுஸ்
4) பசில்  5) பெனடிக்ற்

33. தூய பற்றிக் பற்றிய கூற்றுக்களுள் பொருத்தமற்றது.

1) இவர் அயர்லாந்தின் திருத்தூதர் எனப்படுகின்றார்
2) சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்
3) தலைவன் திக்சுவை மனந்திருப்பியவர்
4) அஞ்ஞானிகளாக வாழ்ந்த பிக்டுக்களை மனந்திருப்பியவர்
5) அயர்லாந்தில் சாபால் ஆலயத்தை அமைத்தவர்

34. A) இரும்பு மனிதன் என அழைக்கப்பட்டார்

B) 5 வது உரோமைய கலாபனையின் போது கிறிஸ்தவர்களை சிறையில் சந்தித்து, நீதிமன்றம் வரை சென்று கிறிஸ்தவர்களை ஊக்குவித்தவர்.
C) இவர் "இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை" என அழைக்கப்படுகின்றார்.
D) நல்ல கிறிஸ்தவர்கள் தான் உண்மையான அறிவாளி என எடுத்துரைத்தார்.
E) "பிரமாணங்கள்" என்ற நூலை வெளியிட்டார்.

மேற்படி கூற்றுக்களுள் ஒரிஜன் பற்றியவை

1) A D E  2) C D E  3) A B E  4) B C D  5) A B C

35. "வார்த்தை கடவுளிலும் கீழானவர்" என்ற வாதத்தை முன்வைத்தவர்

1) லூசியன்  2) நெஸ்தோரியஸ்  3) மசதோனியுஸ்
4) மனி  4) இயுக்திக்கஸ்

36. எபேசில் கி.பி 431 ல் கூடிய பொதுச் சங்கம் கண்டனம் செய்த வாதம் எது?

1) ஆரிய வாதம்  2) இயுக்திக்கேய வாதம்  3) மசதோனிய வாதம்
4) மனிக்கேய வாதம்  5) நெஸ்தோரிய வாதம்



agaram.lk

37. விஞ்ஞானி அலெக்சாண்டர் கிரகம் பெல் பற்றிய சரியான கூற்று யாது?
1) பென்சிலின் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தார்.
2) பொஸ்டன் நகரில் செவிப்புலனற்ற பிள்ளைகளுக்கான பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றினை நிறுவினார்.
3) இவர் நவீன பௌதீக வியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
4) இங்கிலாந்திலே புனித மேரி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணராக விளங்கினார்.
5) மனிதனின் பரிமாணத்தைப் பற்றிய ஆன்மீக ரீதியான தத்துவத்தை முன்வைத்தவர்.

38. A) திருவிவிலியத்தை இலத்தீன் மொழியிலிருந்து ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்தார்
B) சுவிற்சலாந்து படைவீரர்கள் மத்தியில் ஆன்மீகக் குருவாக பணியாற்றினார்.
C)"ஒருவர் நம்பிக்கையால் மட்டுமே மீட்படைய முடியும்" எனப் போதித்தார்.
D) திருச்சபையின் பரிபூரண பலனுக்கு எதிராக போதித்தார்.
E) நற்கருணையில் கிறிஸ்துவின் பிரசன்னம் இல்லை. அது ஒரு நினைவுகூரும் அடையாளம் மட்டுமே என்றார்.
மேற்படி கூற்றுக்களுள் மாட்டீன் லூதர் பற்றிய கருத்துக்களுள் பொருத்தமானவை
1) A B E 2) A C D 3) B C E 4) C D E 5) A B C

39. மத்திய யுகத்திலே திருச்சபை வரலாற்றில் இருள் சூழ்ந்த காலமாக கருதப்படக் காரணமாக அமைவது
1) திருச்சபையின் தலைமைத்துவம் அரசியலிலும் உலக போக்கிலும் ஈடுபட்டமை
2) கிறிஸ்தவர்களின் சொத்துக்கள், உடமைகள் பறிக்கப்பட்டன.
3) கிறிஸ்தவர்கள் தமது இடங்களை விட்டு வெளியேறினார்கள்.
4) கிறிஸ்தவ மறை பரப்பாளர்கள், ஆயர்கள் துன்புறுத்தப்பட்டமை
5) தப்பறையான வாதங்களால் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டமை

40. மேல் நாட்டில் துறவற வாழ்வை பரப்பியவர்கள் உள்ளடங்கும் தொகுதி.
1) தூய அத்தனாசியுஸ், பசில், கசியன்
2) தூயு பெனடிக்ட், பசில், தூய அகுஸ்தீன்
3) தூய பெனடிக்ட், கசியன், பக்கோமியுஸ்
4) பக்கோமியுஸ், பசில், தூய அகுஸ்தீன்
5) தூய அகுஸ்தீன், தூய பெனடிக்ட், கசியன்

agaram.lk

41. "கிறிஸ்து வழி வாழ்வு" எனும் நூலை எழுதியவர்
1) தோமஸ் ஆ கெம்பிஸ் 2) அவிலா திரேசா 3) டான்ரே அலிகியோரி
4) சிலுவை யோவான் 5) ஜோண் மில்ரன்

42. சீர்திருத்த வாதியான தோமஸ் முன்ற்சர் அன்னை மரியா பற்றி கூறிய கூற்றுக்களுள் பொருத்தமானவற்றினை தெரிக
A) "தாழ் நிலையைக் கண்ணோக்கினார்" என்ற மரியாவின் பாடலில் உள்ள வார்த்தைக்கேற்ப பெண்ணிய விடுதலைக்கு குரல் கொடுத்தார்.
B) அன்னை மரியா இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு இடை நிலையாளராக இருந்தார்.
C) அன்னை மரியா பிறக்கும் போது சென்மபாவம் இன்றி பிறந்தார்.
D) அன்னை மரியா திருச்சபையின் தாய்
E) அன்னை மரியா இயேசுவின் பிறப்பின் முன்னும், பிறப்பின்போதும், பிறப்பின் பின்னும், கன்னியாகவே இருந்தார்.
1) A B C 2) B C E 3) A B E 4) B C D 5|) A D E

43. “ஏழு அருட்சாதனங்களின் இயல்புகள்” என்ற மடலை வரைந்தவர்.

1) மாட்டின் லூதர் 2) வில்லியம் ஷெரி 3) பிறப்பு பத்தாம் சிங்கராயர்
4) 8ம் ஹென்றி 5) பிறப்பு 5ம் லியோ

44. இயேசு சபை நிறுவப்பட்டது

1) கி.பி 1566 2) கி.பி 1540 3) கி.பி 1491 40 கி.பி 1564 5) கி.பி 1597

45. காலிலே சப்பாத்து அணியாமல் காலணி துறந்த சபையாக கருதப்பட்ட துறவற சபை

1) இயேசுசபை 2) பிரான்சிஸ்கன் சபை 3) டொமினிக்கன் சபை
4) கார்மேல் சபை 5) வின்சென்சியன் சபை

46. A) கிறிஸ்தவ வரலாற்றிலே முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் சிற்பக்கலை காணப்படவில்லை.

B) கலாபனைகள், மற்றும் சுயாதீனமாக இயங்க முடியாது இக்கலை தடைசெய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தொடர்பாக குறிப்பிடக் கூடியது

1) கூற்று A சரி கூற்று B பிழை
2) A, B இரண்டு கூற்றுக்களும் சரியானவை
3) A, B இரண்டு கூற்றுக்களுமே தவறானவை
4) கூற்று A பிழை கூற்று B சரி
5) A, B இரண்டு கூற்றுக்களிடையே தொடர்பு இல்லை

47. “நிகழ்காலச் சித்திரக் கலையின்” தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

1) மைக்கல் ஆங்சலோ 2) லியானோ டோடாவின் .சி 3) கியோற்றோ
4) லோறன்சோ பர்ணினி 5) கபிரியேல் போரே

agaram.lk

48. திருத்தந்தையின் வழிகாட்டலையும், இலத்தீன் வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொண்டவர்கள்

1) சீரோ மலபார் திருச்சபை 2) வைதீக சீரிய திருச்சபை 3) யாகோபித்த சபையினர்
4) இலத்தீன் திருச்சபை 5) மார்தோமையார் திருச்சபை

49. சீன மொழியில் உண்மை இறைக்கோட்பாடு என்ற நூலை எழுதியவர்.

1) பிரான்சிஸ் சவேரியார் 2) யோண் கல்வி 3) மத்தேயு ரிச்சி
4) சுவிங்ளி 5) ஜோண் வெஸ்லி

50. போர்த்துக்கேயர் காலத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களுள் ஒன்றாக கருதப்படுவது.

1) கிறிஸ்துவின் பாடுகள் 2) வேதகாவிய 3) வியாகுல பிரசங்கம்
4) கிஸ்தியாணி 5) ஞானப்பள்ளு

(50x2=100 புள்ளிகள்)

**வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

FWC

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- ❖ பகுதி 1 இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி 11இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாக்களுக்கும் 20 புள்ளிகள் உரித்தாகும்

### பகுதி - I

1) i. அலெக்ஸ்சாந்திரிய கல்விக் கூடத்தின் சிறப்பம்சங்களில் நான்கினைக் குறிப்பிடுக.
   ii. ஆரம்பகால கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் நால்வரைக் குறிப்பிட்டு அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் ஒவ்வொன்று வீதம் தருக.
   iii. ஆரிய வாதம் குறித்து நான்கு விடயங்களை எழுதுக.
   iv. தூய பெனடிற் துறவறசபையின் பங்களிப்புக்கள் நான்கு குறிப்பிடுக.
   v. சிலுவைப்போர் வளர்ச்சியடையத் துணை நின்ற காரணிகள் நான்கு குறிப்பிடுக.

2) i. எருசலேம் ஆலயத்தின் முக்கியத்துவம் பற்றி நான்கு கருத்துக்களில் எழுதுக.
   ii. இயேசு சீடர்களின் பாதங்கழுவும் சடங்கின் மூலமாக கிடைக்கின்ற செய்திகள் நான்கினை முன்வைக்குக.
   iii. பாலஸ்தீனாவில் உரோமையரின் ஆட்சிக்காலத்தில் படைவீரர்கள் ஆற்றிய பணிகள் நான்கு குறிப்பிடுக.
   iv. இரவலர் சபையினரின் பணிகள் நான்கினை எழுதுக.
   v. சீர்திருத்த சிந்தனையாளர் மாட்டீன் லூதர் பற்றிய நான்கு விடயங்களை தருக.

3) i. திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய துறவறசபைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   ii. தூய தோமஸ் அக்குவினாஸின் இறையியல் திருவழிபாட்டு ஆக்கங்கள் நான்கினை எழுதுக.
   iii. கிறகோரியன் இசை பற்றிய நான்கு கருத்துக்களை தருக.
   iv. கோதிக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள் நான்கினை முன்வைக்குக.
   v. கிறிஸ்தவர்களின் ஆரம்ப காலநிலச்சுரங்க சித்திரங்கள் நான்கும் அவைகுறித்து நிற்கும் கருத்துக்களையும் எழுதுக.

agaram.lk

# பகுதி - II

4) அ) தூய பவுல் தனது மறைத்தூதுப் பயனங்களின் போது எதிர்கொண்ட சவால்களை எடுத்துக்கூறி விளக்குக.

ஆ) தூய பவுலின் முன்மாதிரிகளைப் பின்பற்றி இன்றைய கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தில் வருகின்ற சவால்களை எவ்விதம் வெற்றி கொள்வீர் என்பதை விபரிக்குக.

5) அ) இயேசுவின் காலத்தில் காணப்பட்ட யூத சமூக மரபுகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

ஆ) இன்றைய உலகில் கிறிஸ்தவ குடும்பங்கள் தமது ஆன்மீக வாழ்வில் எதிர்கொள்ளும் பாதகமான விடயங்களை விபரிக்குக.

6) அ) கிறிஸ்தவத்தின் மறு மலர்ச்சிக்காக தோன்றிய சீர்திருத்த சபைகளுள் ஒன்றைப்பற்றி விளக்குக.

ஆ) கத்தோலிக்க திருச்சபையின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் கூட்டப்பட்ட திரிதெந்தின் சங்கத்தையும் அதன் தீர்மானங்களையும் விளக்குக.

7) அ) துறவற வாழ்வின் தோற்றப்பாட்டினையும் அதன் வளர்ச்சி நிலைகளையும் விளக்குக?

ஆ) இன்றைய காலகட்டத்தில் துறவறவாழ்வின் அழைத்தலுக்கு எதிரான சவால்களை முன்வைக்குக.

8) அ) நவீன உலகிலே விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பினை வபரிக்குக.

ஆ) உமது, ஆற்றல்கள், திறமைகள், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சமுதாய வளர்ச்சிக்கு உம்மால் ஆற்றக்கூடிய பிறர் நலப்பணிகளை விளக்குக?

agaram.lk